பெரியார் பல்கலைக்கழகம்
PERIYAR UNIVERSITY
SALEM – 636011, TAMIL NADU, INDIA
NAAC A++ Grade - State University - NIRF Rank 59, NIRF Innovation Band of 11-50

முனைவர் S.கதிரவன்
தேர்வாணையர் (முகூபொ)

நாள்: 10.08.2023

எண்.பெ.ப./தே.ஆ/CRE–V/Special Exam/2023/23F82358

பெறுதல்

பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற
கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள்.

அன்புடையீர்

பொருள் தேர்வாணையர் அலுவலகம் – பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கான சிறப்புத் தேர்வு (Special Exam) நடைபெறுதல் – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை இவ்வலுவலக குறிப்பாணை நாள்: 08.08.2023.

*********

பார்வையில் கண்டுள்ள குறிப்பாணையின்படி, பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்கள் தங்கள் படிப்புக்காலம் முடிந்து அதன் பின் நிலுவைத்தாள் எழுதுவதற்கு மூன்று ஆண்டுகள் வரை மட்டுமே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, படிப்புக்காலம் முடிந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் நிலுவைத்தாள் வைத்துள்ள மாணாக்கர்களின் நலன் கருதி சிறப்புத் தேர்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் தாம் பயின்ற பழைய பாடத்திட்டத்திலேயே நிலுவைத் தாள்களினை தேர்வு எழுத அனுமதிக்கப்படும்.

மாணாக்கர்களுக்குச் சிறப்புத் தேர்வுகள் எதிர்வரும் அக்டோபர் 2023–இல் நடைபெற உள்ளது. அதற்கான விண்ணப்பத்தினை 14.08.2023–ஆம் தேதி முதல் www.periyaruniversity.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து உரிய விவரங்களை பூர்த்தி செய்து தேர்விற்கான கட்டணத்தினை மாணாக்கர்கள் பயின்ற கல்லூரியின் வழியாகச் செலுத்தலாம். அதற்கு இறுதி நாள் 29.09.2023 ஆகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கனிவுடன் திருப்புக...

இதற்கான தேர்வுக் கட்டண விவரங்கள் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | பாடப் பிரிவு | தேர்வு கட்டணம் (ஒரு பாடத்தாளிற்கு மட்டும்) | | ஒறுப்புக்கட்டணம் (ஒரு பாடத்தாளிற்கு மட்டும்) | விண்ணப்ப படிவ கட்டணம் (Application Fee) | மதிப்பெண் பட்டியல் கட்டணம் (Statement of Marksheet Fee) |
|---|---|---|---|---|---|---|
| | | எழுத்துத் தேர்வு | செய்முறைத் தேர்வு | | | |
| 1 | இளநிலை | ரூ.85/- | ரூ.100/- (3 Hrs)<br>ரூ.150/- (3 Hrs) | ரூ.2000/- | ரூ.50/- | ரூ.100/- |
| 2 | முதுநிலை | ரூ.150/- | ரூ.200/- (3 Hrs)<br>ரூ.275/- (3 Hrs) | ரூ.2000/- | ரூ.50/- | ரூ.100/- |
| 3 | MBA | ரூ.400/- | ரூ.350/-<br>ரூ.700/- (Project) | ரூ.2000/- | ரூ.50/- | ரூ.100/- |
| 4 | MCA | ரூ.300/- | ரூ.350/-<br>ரூ.600/- (Project) | ரூ.2000/- | ரூ.50/- | ரூ.100/- |

இத்தேர்விற்கான கால அட்டவணை மற்றும் தேர்வுமைய விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும். கல்லூரி முதல்வர் உரிய துறை வாயிலாக மாணாக்கர்களுக்குத் தெரியப்படுத்தி சிறப்புத் தேர்விற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10/8/23

தேர்வாணையர்

10/8/23

10/8/2023

Phone: 6385770444 Email - examcoe@gmail.com
Website: www.periyaruniversity.ac.in